# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2459/ 41 - 2025 ඔක්තෝබර් මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.10.23**

2459/41 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2025 ஆம் ஆண்டு அம்மடுவ சின்ன கதிர்காம எசல பெரஹரா உற்சவம்
ஒற்றோபர் 18 ஆந் திகதி சுப நேரத்தில் ஆரம்பிக்கப்படும்**

- ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி தானம் வழங்கல் மற்றும் முழு இரவு பிரித் போதனை.
- ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி சுபநேரத்தில் கொடியேற்றம்.
- ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி இருந்து 26 வரை இரவு சுபநேரத்தில் கொடியேற்றம் மற்றும் குபல் திருவிழா.
- ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி இருந்து 31 ஆந் திகதி வரை தெவொல் திருவிழா.
- நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி இருந்து 05 ஆந் திகதி வரை மகா திருவிழா.
- நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி கலை வரலாற்று முக்கியத்துவம் மிக்க தியபோல தடாகத்தில் நீர்வெட்டுதல் உடன் எசல பெரஹரா நிறைவு பெறும்.

2. தேவாலயத்தில் வடக்கு பக்கத்தில் தேவாலயத்தின் பின்பக்க முகலாணவும் தெற்கு பக்கம் ரன்வல அம்மடுவ வீதியும் கிழக்குப் பக்கம் தேவகிரி பூசாரி அவர்களின் காணியும் மேற்கு பக்கம் நிலமே அவர்களின் காணியும் எல்லைகளாக உள்ளன.

3. நோயாளர்கள், தொற்று நோயாளர்கள் மற்றும் இனிப்புப் பண்ட வியாபாரிகள் மேலும், அன்னதானம் கொடுக்க விரும்பும் எவரும் இப்பகுதியில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

4. மாவட்ட அதிகாரியின் எழுத்து மூல அனுமதி இன்றி மாடுகளோ அல்லது வேறு எவ்வித மிருகங்களோ அனுமதிக்கப்பட மாட்டாது.

5. திருவிழா நடைபெறும் பூமிப்பகுதியில் வாகனம் செலுத்தவோ நடமாடவோ அனுமதிக்கப்பட மாட்டாது.

1A - G45656 - 04 (2025/10)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

6. இப்பகுதியில் இருக்கும் வியாபார நிலையங்களுக்கு ஒரு மீற்றருக்கு குறையாத குப்பை போடும் கூடைகள் வழங்கப்படும். குப்பைகளை கூடைகளில் போட்ட பின் மூடி வைக்கப்பட வேண்டும்.

7. தேநீர் கோப்பை, கோபி கோப்பை, பால்பெக்கட் போன்றவைகளை குப்பைத் தொட்டிகளில் போடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், அவ்வாறு குப்பைகளை வீசியது அதிகாரிகளின் கவனக்குறைவால் என நிரூபிக்கப்பட்டால் கட்டளையை மீறியதாக கருதப்படும்.

8. அதிகாரியின் மாவட்ட உத்தரவுக்கேற்ப 15, 16, 17, 18, 19 கட்டளைகளை மீறி உத்தரவாதப்படி இப்பூமிப் பகுதியில் பேக்கரி சாப்பாட்டு இடங்கள் வியாபார நிலையங்கள் நடாத்தப்படுவதை தடுக்கலாம் அனுமதிப்பத்திரங்களை ரத்து செய்யலாம்.

9. இப்பகுதியில் தொற்று நோயாளர்கள் இருப்பின் சுகாதார பரிசோதகருக்கோ அல்லது வலயங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் வைத்தியருக்கோ உடனடியாக அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

10. இப்பகுதியில் தொற்று நோயாளரை சாப்பாட்டு கடைக்கு அனுமதிக்கவோ விற்பனை செய்யவோ உணவு சமைக்கவோ அனுமதி இல்லை.

11. தொற்று நோயாளரை தங்க வைப்பதற்கு அனுமதி இல்லை. பொலிஸ் அல்லது சுகாதார அதிகாரிக்கோ அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

12. 7 ஆவது நிபந்தனையின்படி பிச்சை எடுக்கவோ இலவசமாக உணவு வழங்கவோ அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தை தவிர வேறு இடங்களில் பிச்சை எடுக்கவோ இலவசமாக உணவு வழங்கவோ இடமளிக்கப்பட மாட்டாது.

13. 7 ஆவது அல்லது 10 ஆவது நிபந்தனையின்படி அவ்வவ் இடங்களுக்கான பெயரையோ பெயர் பலகையோ மாற்றுவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ யாருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

14. மாவட்ட அதிகாரி, சுகாதர உத்தியோகத்தராகியொருவருக்கு திருவிழா நடைபெறும் பூமிப் பிரதேசத்தில் குடிசை அமைப்பதற்கு அல்லது தூண் வைப்பதற்கு சட்ட பூர்வமாக இடமளிக்கப்பட்டுள்ளது.

**அனுராத ஜயகொடி,**
பிரதேச செயலாளர்,
வெலிகெபொல.

EOG 10 - 0230

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.